# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI

Daily Morning

Vol : 01 | Issue : 151 | 4 Pages | 3.1.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 151 | 4 பக்கங்கள் | 3.1.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## ராமர் கோவில் கும்பாபிஷேகம்: "அனுமன்" அவர்களை அழைத்து வருவார்: மத்திய மந்திரி



உத்தர பிரதேசம், ஜன.3

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட்டு கும்பாபிஷேகத்திற்கு தயாராகியுள்ளது. வருகிற 22ந்தேதி கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ள அழைப்பிதழ் கொடுக்கப்பட்டு வருகிறது.

அரசியல் கட்சி தலைவர்கள் முதல் சாதனைப் படைத்தவர்கள், விருது பெற்றவர்கள் என ஆயிரக்கணக்கானோருக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் எதிர்க்கட்சிகளை சேர்ந்த பலர் தங்களுக்கு அழைப்பிதழ் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

சில தலைவர்கள் தங்களுக்கு அழைப்பிதழ் வந்ததாகவும், தாங்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்த கொள்ளமாட்டோம் எனவும் தெரிவித்துள்ளனர். அதற்கு காரணம் ராமர் கோவிலை வைத்து பா.ஜனதா ஆதாயம் பார்க்க நினைக்கிறது என விமர்சனம் செய்வதுதான்.

இந்த நிலையில் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறுகையில் "பல வருட போராட்டங்களுக்குப் பிறகு ராமர் கோவில் கும்பாபிஷேகம் வருகிற 22ந்தேதி நடைபெற இருக்கிறது. ராமர் பக்தர்கள் வீடு வீடாக சென்று அழைப்பிதழ் கொடுத்து வருகிறார்கள்.

எல்லோரும் 22ந்தேதி அயோத்தி சென்று கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ள முடியாது. கும்பாபிஷேகம் முடிந்த பிறகு உத்தர பிரதேச மாநிலம் அரசு மற்றும் கோவில் கமிட்டி ஆகியவற்றின் வழிகாட்டுதலின்படி மக்கள் செல்ல முடியும். சிலர் கலந்து கொள்ளமாட்டோம் எனத் தெரிவித்துள்ளனர். அவர்களை அனுமன் அழைத்து வருவார்.

இவ்வாறு மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் சீதாராம் யெச்சூரி கும்பாபிஷேக விழாவில் கலந்த கொள்ளமாட்டேன் எனத் தெரிவித்துள்ளார். மேலும், பா.ஜனதா ராமர் கோவிலை அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்துகிறது என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

உத்தவ் தாக்கரேயின் சிவசேனா கட்சியின் தலைவரான சஞ்சய் ராவத், அவரது கட்சி தொண்டர்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்த கொள்ளமாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இதெல்லாம் அரசியல். பா.ஜனதா நடத்தில் நிகழ்ச்சியில் யார் கலந்த கொள்வார்கள்? இது தேசிய நிகழ்ச்சி இல்லை. இது பா.ஜனதாவின் நிகழ்ச்சி. பா.ஜனதாவின் பேரணி. பா.ஜனதா நிகழ்ச்சி முடிந்த பின்னர் நாங்கள் அயோத்தி செல்வோம் என்றார்.

இமாச்சல பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு, அழைப்பிதழ் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் அயோத்தி செல்வேன். கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்வதைவிட, யோசிக்க ஒன்றுமில்லை என்றார்.

## உயர்மட்ட சுனாமி எச்சரிக்கையை கைவிட்டது ஜப்பான்



ஜப்பான், ஜன.3

2024ம் ஆண்டின் முதல் நாளிலேயே ஜப்பானின் மேற்கு பகுதியில் 7.6 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு, 50 முறை நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.

ஜப்பானில் இதற்கு முன் 3.1.ல் 7.4 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமியால் சுமார் 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

இதுபோன்ற அசம்பாவிதங்களை தடுக்க அந்நாட்டு அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நிலநடுக்கம் எதிரொலியால் 10 அடி வரை சுனாமி அலை தாக்க வாய்ப்புள்ளதாக கூறப்பட்டது. இதனால், ஹொக்கைடோவில் இருந்து கியூஷூ பகுதி வரை சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் வெளியிடப்பட்ட உயர்மட்ட சுனாமி எச்சரிக்கையை அந்நாட்டு அரசு கைவிட்டது.

இருப்பினும், பள்ளமான பகுதிகளில் உள்ள மக்களை உயரமான பகுதிகளுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துப்பாக்கி சூட்டில் 3 பேர் உயிரிழப்பு மணிப்பூரில் மீண்டும் கலவரம், 5 மாவட்டங்களில் பரபரப்பு

மணிப்பூர், ஜன.3

மணிப்பூர் மாநிலத்தின் தௌபால் மாவட்டத்தின் லிலாங் சிங்காவ் பகுதிக்குள் காரில் வந்திறங்கிய மர்ம நபர்கள் பொது மக்களை நோக்கி நடத்திய திடீர்துப்பாக்கி சூடு அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

துப்பாக்கி சூட்டில் பொது மக்களில் மூன்று பேர் உயிரிழந்தனர். மேலும் ஐந்து பேர் படுகாயம் அடைந்தனர். திடீர் துப்பாக்கி சூட்டை தொடர்ந்து அந்த மாவட்டத்தில் ஊடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தௌபால் மட்டுமின்றி இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு, காக்சிங் மற்றும் பிஷ்னுபூர் மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு மீண்டும் பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

திடீர்துப்பாக்கி சூட்டை தொடர்ந்து ஆவேசம் அடைந்த உள்ளூர்வாசிகள் மூன்று நான்குசக்கர வாகனங்களுக்கு தீ வைத்தனர். அந்த வாகனங்கள் யாருக்கு சொந்தமானவை என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

வன்முறை சம்பவத்திற்கு அம்மாநில முதலமைச்சர் பைரன் சிங் கடும் கண்டனம் தெரிவித்தார். மேலும் தாக்குதல் நடத்தியவர்களை பிடிக்கும் பணிகளில் காவல் துறை செயல்பட்டு வருகிறது. விரைவில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, சட்டப்படி தண்டிக்கப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கவிஞர் வைரமுத்துவின் "மகா கவிதை" நூல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

சென்னை, ஜன.3

சென்னைதேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கில் கவிஞர் வைரமுத்து எழுதிய 'மகா கவிதை' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இந்த நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப. சிதம்பரம் பெற்றுக் கொண்டர்.

இந்நிகழ்வில் நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் பங்கேற்றார்.




மேலும், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர். விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: நான் கவிஞனும் அல்ல.. கவிதை விமர்சகனும் அல்ல.. கவிஞராகவும், கலை விமர்சகராகவும் இருந்து கோலோச்சிய கலைஞர் மட்டும் இன்று இருந்திருந்தால் 'மகா கவிதை' தீட்டிய 'கவிப்பேரரசு' வைரமுத்துவை உச்சி முகர்ந்து பாராட்டியிருப்பார்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# பிரதமர் மோடியை சந்திக்கும் ஓ.பி.எஸ். வெளியான முக்கிய தகவல்

திருச்சி, ஜன.3

தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வுடனான கூட்டணி முறிந்து நான்கு மாதங்களுக்கு பிறகு பிரதமர் மோடி முதல் முறையாக நாளை (ஜனவரி 2) தமிழகம் வருகிறார். பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள பிரதமர் மோடி நாளை காலை திருச்சி வருகிறார்.

இன்று காலை 10.30 மணிக்கு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 38வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் பிரதமர் மோடி அதன்பிறகு, மதியம் 12 மணிக்கு திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் ரூ. 1200 கோடி செலவில் சர்வதேச தரத்தில் கட்டப்பட்டு இருக்கும் பன்னாட்டு புதிய விமான முனையத்தை திறந்து வைத்தார். இதே நிகழ்ச்சியில் ரூ. 19 ஆயிரத்து 850 ரோடி மதிப்பிலான திட்டங்களையும் பிரதமர் மோடி துவங்கி வைக்கிறார். இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் ஆளுனர் ஆர்.என். ரவி ஆகியோர் கலந்து கொள்ள இருக்கின்றனர். இந்த நிலையில், திருச்சி வரும் பிரதமர் மோடியை முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் சந்திக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. பிரதமர் மோடி மற்றும் ஓ.பி.எஸ். இடையேயான சந்திப்பு திருச்சி விமான நிலையத்தில் நடைபெற இருப்பதாகவும் இதற்காக ஓ. பன்னீர்செல்வத்திற்கு நேரம் ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# அதிகனமழை பெய்யும் என சொன்னார்கள்.. எவ்வளவு என்று சொல்லவில்லையே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜன.3


சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கில் கவிஞர் வைரமுத்து எழுதிய 'மகா கவிதை' நூல் வெளியீட்டு விழா இன்று நடைபெற்றது.

இந்த நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் பெற்றுக் கொண்டர்.

விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கவிஞர் வைரமுத்துவை பாராட்டி பேசினார். அப்போது, மழையால் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு தொடர்பாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

வானிலை மைய அதிகாரிகள் அதிகனமழை பெய்யும் என சொன்னார்



களே தவிர, எவ்வளவு மழை பெய்யும் என சொல்லவில்லை. 100 ஆண்டுகள் இல்லாத மழை பெய்தது என்கிறார்கள். ஆனால், அவ்வளவு மழை பெய்ததற்கான காரணத்தை யாரும் சொல்லவில்லை. ஏரி உடைந்ததைப் போல், வானம் உடைந்து கொட்டியது போல மழை பெய்துள்ளது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. சுற்றுச்சூழலில் தமிழ்நாடு அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள காலநிலை மாற்ற நிர்வாகக் குழு எனது தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



# அதிகனமழை பெய்யும் என சொன்னார்கள்.. எவ்வளவு என்று சொல்லவில்லையே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்


சென்னை, ஜன.3

பாக்கெட் செய்யப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்பவர்களும், இறக்குமதி செய்பவர்களுடன் விலைப்பட்டியலில் ஒட்டு மொத்த விலையுடன் ஒரு கிலோ அல்லது ஒரு லிட்டர் விலையையும் குறிப்பிட வேண்டும். இந்த புதிய நடைமுறையை மத்திய அரசு இன்று முதல் அமல்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே இந்த நடைமுறை பல முறை தள்ளி வைக்கப்பட்டது. இன்று முதல் அது நடைமுறைக்கு வந்துள்ளது. அதன்படி ஒரு கிலோவிற்கும் அதிகமான எடை கொண்ட பாக்கெட் செய்யப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், அதிகபட்ச சில்லறை விலையுடன், ஒரு கிலோவிற்கு 'யூனிட் விற்பனை விலை' என்ன என்பதை அச்சிட வேண்டும்.

அதே போல ஒரு லிட்டருக்கு மேல் அளவு கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யும் போது அதற்கு அதிக




பட்ச சில்லறை விலையுடன் ஒரு லிட்டருக்கு யூனிட் விற்பனை விலை என்ன என்பதையும் குறிப்பிட வேண்டும். உதாரணமாக 5 கிலோ பாக்கெட் கோதுமைமாவுபாக்கெட்டில் மொத்த விலையுடன், ஒரு கிலோவின் விற்பனை விலையும் இடம்பெற வேண்டும்.

அதேபோல் ஒரு கிலோவிற்கும் குறைவான பாக்கெட் செய்யப்பட்ட உணவு பொருளுக்கு அதன் மொத்த விலையுடன், ஒரு கிராம் விற்பனை விலையும் இடம்பெற வேண்டும். ஒரு லிட்டருக்கும் குறைவான பாக்கெட் செய்யப்பட்ட பொருளுக்கு ஒரு மில்லி லிட்டர் விலையையும் குறிப்பிட வேண்டும். ஒரு மீட்டருக்கு மேல் அளவு கொண்ட பொருளுக்கு ஒரு மீட்டருக்கான விலையையும், ஒரு மீட்டருக்கு குறைவான அளவு கொண்ட பொருளுக்கு ஒரு செ.மீ. விலையையும் குறிப்பிட வேண்டும்.

பேனா மற்றும் பென்சில்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையை கொண்ட பாக்கெட்டுகளில் ஒரு பென்சில் அல்லது பேனாவின் யூனிட் விலையை குறிப்பிட வேண்டும்.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:

இந்த புதிய நடைமுறையால் பொருட்களை வாங்குபவர்கள் சரியான முறையில் தேர்ந்தெடுத்து பொருட்களைவாங்க முடியும். இன்று முதல் இந்த புதிய நடைமுறை கட்டாயமாகிறது. இந்த விதிமுறைகளை மீறும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படும்.

பால், டீ, பிஸ்கட், சமையல் எண்ணெய், கோதுமை மாவு, குளிர்பானம், குடிநீர், குழந்தைகளுக்கான உணவு, பருப்பு வகைகள், தானியங்கள், சிமெண்ட் பை, பிரட் உள்ளிட்ட 19 வகையான பொருட்களை பேக்கேஜிங் செய்வதற்கான 'குறிப்பிட்ட அளவு' என்ற விதிமுறைகளும் நீக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் உற்பத்தியாளர்கள் சந்தையில் விற்கும் அனைத்து பாக்கெட் செய்யப்பட்ட பொருட்களின் அளவை தீர்மானிக்க முழு சுதந்திரம் உள்ளது. அனைத்து அளவுகளிலும் பாக்கெட் செய்யப்பட்ட பொருட்கள் கிடைப்பதால் நுகர்வோர் தங்களுக்கு தேவையானதை தேர்வு செய்து வாங்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ராமர் கோவில் திறப்பு அயோத்திக்கு வர சொல்லி 2 கோடி குடும்பங்களுக்கு அழைப்பு



சென்னை, ஜன.3

அயோத்தியில் கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான ராமர் கோவிலில் வருகிற 22ந் தேதி (திங்கள்) சுவாமி சிலைகள் பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

மிகவும் கோலாகலமாக நடைபெற இருக்கும் வரலாற்று சிறப்புமிக்க புனித நிகழ்ச்சியில் நாடு முழுவதும் மக்கள் மனப்பூர்வமாக பங்கெடுப்பார்கள்.

முதல் நாளில்தான் பங்கெடுக்க வேண்டும் என்பதல்ல. ராமர் கோவில் காலங்களை கடந்தும் நிலைத்து நிற்கும். மக்கள் சவுகரியப்பட்ட நாட்களில் சென்று ராமரை தரிசியுங்கள். 22ந் தேதி வீடுகளில் விளக்கேற்றி வழிபடுங்கள் என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராமர் கோவில் திறப்பு விழாவையொட்டி நாடு முழுவதும் வீடு வீடாக சென்று மக்களை நேரில் அழைக்கும் திட்டத்தை இந்து அமைப்புகள் தொடங்கியுள்ளன.

தமிழ்நாட்டில் சுமார் 2 கோடி குடும்பங்களை நேரில் அழைக்கிறார்கள். இதற்காக அயோத்தியில் இருந்து பூஜித்து எடுத்து வரப்பட்ட அட்சதை ராமர் படம், நிகழ்ச்சி பற்றிய துண்டு பிரசுரம் வந்துள்ளது.

இவற்றை வீடு வீடாக கொடுத்து மக்களை அழைக்கும் நிகழ்ச்சி தொடங்கியது. இதில் ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், பா.ஜனதா, இந்து முன்னணி, அகில பாரத வித்யார்த்தி பரிசத், பஜ்ரங் தளம் உள்பட 30க்கும் மேற்பட்ட அமைப்பினர் ஈடுபட்டுள்ளார்கள்.

வீடுகளுக்கு செல்லும் போது ராமர் கோவில் திறக்கப்படுவது பற்றி கூறி அட்சதை, ராமர் படம், நிகழ்ச்சி விபர பிரசுரங்களையும் வழங்கி வருகிறார்கள். இந்த பணியில் ஈடுபட்டு உள்ள சேவகர்களிடம் கேட்ட போது, இந்த புனித நிகழ்ச்சியை மக்கள் எல்லோரும் கொண்டாட வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். ராமர் எல்லோருக்கும் சொந்தம். இதில் பிரபலங்கள், முக்கிய பிரபலங்கள், சாதி, மதம் என்று எதுவும் பார்ப்பதில்லை. எல்லா வீடுகளுக்கும் நேரில் சென்று அழைக்கிறோம். இந்த பணிகள் வருகிற 15ந் தேதிக்குள் நிறைவடையும் என்றனர்.

# கண்மாயில் சிக்கிய பள்ளி மாணவி... காப்பாற்ற குதித்த இளம்பெண்களுக்கு நேர்ந்த விபரீதம்




தூத்துக்குடி, ஜன.3

தூத்துக்குடி அருகே, 9ம் வகுப்பு பள்ளி மாணவி உட்பட இரு இளம் பெண்கள் கண்மாயில் குளிக்க சென்றபோது, நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோக த்தை ஏற்படுத்தியுள்ளது. தூத்துக்குடி அருகேயுள்ள மேல மருதூர் கிராமத்தைச் சேர்ந்தவர் மேனகா. ஒன்பதாம் வகுப்பு படித்து வந்த இவர், அதே கிராமத்தை சேர்ந்த கல்லூரி மாணவி கனிச்செல்வி மற்றும் இளம் பெண் கலைச்செல்வி என்பவர்களுடன் சேர்ந்து கிராமத்தில் உள்ள கண்மாயில் குளிக்க சென்றிருக்கிறார். அப்போது, கண்மாயின் ஆழமான பகுதியில் குளித்து கொண்டிருந்த மாணவி, திடீரென நீரினுள் மூழ்கி தத்தளித்ததாககூறப்படுகிறது. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த இளம் பெண்கள் இருவரும் மாணவியை காப்பாற்ற சென்ற நிலையில், மாணவி மேனகா மற்றும் கலைச்செல்வி ஆகிய இருவரும் நீருக்குள் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இதில், கல்லூரி மாணவி கனிச்செல்வியை அக்கம் பக்கத்தினர் நூலிழையில் காப்பாற்றியுள்ளனர். தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள நிலையில், தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிவகாசி அச்சகங்களில் ரூ.400 கோடிக்கு காலண்டர்கள் தயாரிப்பு

சிவகாசி, ஜன.3

சிவகாசியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அச்சகங்கள் இயங்கி வருகின்றன. அதில் 100க்கும் மேற்பட்ட அச்சகங்கள் பல்வேறு வகையான காலண்டர்கள் தயாரிப்பில் ஈடுபடுகின்றன. இந்த தொழிலில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்உள்ளனர். தமிழகத்தில் சில மாவட்டங்கள் புயல் மழையால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின.

இதனால் காலண்டர் ஆர்டர் கொடுத்த பலர், தங்களது காலண்டர்களை வாங்காமல் இருந்தனர். தற்போது அந்த மாவட்டங்களில் இயல்புநிலை திரும்புகிறது.

இந்தநிலையில் ஏற்கனவே ஆர்டர் கொடுக்கப்பட்ட காலண்டர்கள் தற்போது சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு உள்ளன.

மேலும் அரசியல்வாதிகள் பலர் தற்போது புதிய ஆர்டர்கள் கொடுத்து வருகிறார்கள். தற்போது பெறப்பட்டு வரும் ஆர்டருக்கு உரிய காலண்டர்கள் வருகிற 15ந் தேதிக்குள் வினியோகம் செய்ய சிவகாசி அச்சகங்கள் முடிவு செய்து அதற்கான பணிகளை இரவு, பகலாக செய்து வருகின்றன.

இதனால் இந்த ஆண்டு சுமார் ரூ.400 கோடி மதிப்பிலான காலண்டர்கள் சிவகாசியில் தயாரிக்கப்பட்டு இந்தியா முழுவதும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் அச்சக அதிபர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு 15,690 பேர் வருகை




சென்னை, ஜன.3

பூங்காவுக்கு மட்டும் 15 ஆயிரத்து 690 பார்வையாளர்கள் வருகை தந்துள்ளதாக பூங்கா நிர்வாகம் தகவல் தெரிவித்து உள்ளது.

இந்தியாவில் மிகப்பெரிய பழமையான உயிரியல் பூங்கா வண்டலூர் உயிரியல் பூங்காவாகும். உலகின் பல்வேறு பகுதியில் இருந்து இந்த பூங்காவை சுற்றிப் பார்க்க வருகின்றனர்.

இன்று ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு உயிரியல் பூங்காவிற்கு வரும் பார்வையாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த நிலையில், பூங்காவுக்கு இன்று மட்டும் 15 ஆயிரத்து 690 பார்வையாளர்கள் வருகை தந்துள்ளதாக பூங்கா நிர்வாகம் தகவல் தெரிவித்து உள்ளது.

# சக்கரத்தில் திடீர் பழுது: சென்னை ரெயில் நடுவழியில் நிறுத்தம்



நாகர்கோவில், ஜன.3

கன்னியாகுமரியில் இருந்து சென்னைக்கு தினமும் மாலை 5.50 மணிக்கு எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரெயில் நேற்று மாலை புறப்பட்டு நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு 6.10க்கு வந்தது.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு சுமார் 20 மீட்டர் தூரம் சென்ற போது ரெயில் என்ஜினின் அடிப்பகுதியில் இருந்து கம்பிகள் உரசும் சத்தம் கேட்டது. உடனே இதனை கவனித்த டிரைவர் சுதாரித்துக் கொண்டு ரெயிலை நிறுத்தினார். இதனால் நடுவழியில் ரெயில் நின்றது. பின்னர் என்ஜின் டிரைவர் கீழே இறங்கி ரெயில் சக்கரம் பகுதியை ஆய்வு செய்தார். அப்போது என்ஜினில் உள்ள சக்கரத்தில் பழுதானது தெரியவந்தது. அதாவது சக்கரத்தில் இணைக்கப்பட்டிருந்த ஸ்பிரிங் சேதமடைந்திருந்தது. உடனே ரெயில்வே ஊழியர்கள் பழுதை சரி செய்தனர்.

இதனை தொடர்ந்து கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் 20 நிமிடம் தாமதமாக அங்கிருந்து புறப்பட்டு சென்றது. சரியான நேரத்தில் பழுதானதை டிரைவர் கவனித்ததால் பெரும் அசம்பாவித சம்பவம் தவிர்க்கப்பட்டது.

# பெற்ற மகளை கொடூரமாக பாலியல் வன்கொடுமை செய்த தந்தை கைது

மும்பை, ஜன.3

சிறுமியின் அக்கா அருகில் உள்ள போலீஸ் நிலையத்திற்கு பாதிக்கப்பட்ட சிறுமியுடன் சென்று பாலியல் வன்கொடுமை புகார் அளித்துள்ளார்.

மராட்டிய மாநிலம் நவுகார்க் நகரில் 14 வயது சிறுமி தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். சில நாட்களுக்கு முன்பு அந்த சிறுமி வீட்டில் தனியாக இருந்திருக்கிறார். அந்த சமயத்தை பயன்படுத்திய தந்தை சிறுமியை அழைத்து தவறாக நடத்து கொள்ள முயன்று இருக்கிறார்.

ஆனால் சிறுமி அதற்கு மறுப்பு தெரிவித்தார். இதனையடுத்து சிறுமியை தந்தை அடித்து துன்புறுத்தி பாலியல் வன்கொடுமை செய்திருக்கிறார்.

இச்சம்பவம் பற்றி யாரிடம் சொல்ல கூடாது என்று சிறுமியை மிரட்டியுள்ளார். சிறுமியும் இச்சம்பவம் பற்றி யாரிடமும் தெரிவிக்காமல் மறைத்திருக்கிறார். இதனையடுத்து சிறுமியின் தந்தை தொடர்ந்து பாலியல் வன்கொடுமை செய்திருக்கிறார்.

இந்நிலையில், தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து அக்காவிடம் கூறி கதறி அழுதுள்ளார். இதை தொடர்ந்து சிறுமியின் அக்கா அருகில் உள்ள நவுகார்க் போலீஸ் நிலையத்திற்கு சிறுமியுடன் சென்று சம்பவம் பற்றி புகார் அளித்துள்ளார். சம்பவம் பற்றி வழக்கு பதிவு செய்த போலீசார் சிறுமியின் தந்தையை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தென் மாவட்ட பகுதிகளுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் நிவாரண பொருட்கள்: கமல்ஹாசன் அனுப்பி வைத்தார்



சென்னை, ஜன.3

சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள மக்கள் நீதி மய்யம் கட்சி தலைமை அலுவலகத்தில் கட்சி தலைவர் கமல்ஹாசன் பேசியதாவது:

மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தென் மாவட்ட பகுதிகளில் மக்கள் நீதி மய்யம் சார்பாக நிவாரண பொருட்கள் வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக தூத்துக்குடி பகுதிகளில் உள்ள மக்கள் நீதி மய்ய நிர்வாகிகள் மூலமாக ரூ.12 லட்சம் மதிப்பிலான நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன. இதனை நெல்லை மண்டல செயலாளர் பிரேம்நாத் முன்னின்று ஒருங்கிணைத்தார். தற்போது, லயன்ஸ் கிளப்புடன் இணைந்து 22 டன் அரிசி, பால் பவுடர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடைகள் சென்னையில் இருந்து அனுப்பிவைக்கப்படுகிறது. மக்கள் நீதி மய்யம் கட்சியின் வக்கீல் அணியின் மாநில செயலாளரான ஸ்ரீதர், லயன்ஸ் கிளப்புடன் ஒருங்கிணைத்து சுமார் ரூ.15 லட்சம் மதிப்பிலான பொருட்களைத் திரட்டித்தந்திருக்கிறார். அவர்களுடன் கோவை மண்டலம் மகளிர் அணியினர், பெங்களூரு கமல்ஹாசன் நற்பணி இயக்கத்தினர், அனைத்து கட்சி நிர்வாகிகளும் நிவாரண பொருட்களைத் திரட்டி தந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

இவ்வாறு அவர் பேசினார்.

# மறைந்தும் மக்கள் பசியாற்றும் கேப்டன்: நினைவிடத்தில் அன்னதானம்



சென்னை, ஜன.3

விஜயகாந்த் நினைவிடத்தில் பிரேமலதா அஞ்சலி செலுத்தினார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 28ந்தேதி மரணம் அடைந்தார். அவரது உடல் சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சி தலைமை அலுவலக வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் ஆங்கில புத்தாண்டையொட்டி கேப்டன் விஜயகாந்த் நினைவிடத்திற்கு வந்த பிரேமலதா விஜயகாந்த், இரு மகன்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினார். கேப்டன் நினைவிடத்தில் கதறி அழுத இளைய மகனுக்கு பிரேமலதா ஆறுதல் கூறி தேற்றினார்.

விஜயகாந்த் நினைவிடத்தில் பொது மக்களும் தொடர்ந்து அஞ்சலி செலுத்திய வண்ணம் உள்ளனர். அஞ்சலி செலுத்த வந்த பொதுமக்களுக்கு பிரேமலதா விஜயகாந்த் அன்னதானம் வழங்கினார். அன்னதானத்தை பெற்றுக்கொண்ட பொது மக்கள் கேப்டன் மறைந்தும் எங்களுக்கு அன்னதானம் வழங்குகிறார் என கண்ணீர் மல்க தெரிவித்தனர். தொண்டர் ஒருவர் கேப்டன் நினைவிடத்தில் அமர்ந்து பசியாறியது காண்போரை கண்கலங்க வைத்தது.

# தொடர் விடுமுறை முடிந்து சென்னை திரும்பும் மக்கள் கடும் போக்குவரத்து நெரிசல்

சென்னை, ஜன.3

தமிழகம் முழுவதும் உள்ள மாணவ, மாணவிகளுக்கு ஜனவரி 1ந்தேதி வரை அரையாண்டு விடுமுறை வழங்கப்பட்டது. இந்த சூழலில் அரையாண்டு மற்றும் தொடர் விடுமுறை இன்றுடன் முடிவடைந்துள்ளது. இதன்படி நாளை பள்ளி, கல்லூரிகள், அரசு அலுவகங்கள் வழக்கம்போல் செயல்பட உள்ளன.

இந்த சூழலில் விடுமுறை காரணமாக சொந்த ஊர்களுக்கு சென்ற பொதுமக்கள், விடுமுறை முடிந்து தற்போது சென்னைக்கு திரும்பி வருகின்றனர்.

ஒரே நேரத்தில் பொதுமக்கள் அனைவரும் விடுமுறை முடிந்து சென்னை திரும்பி வருவது காரணமாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதன்படி செங்கல்பட்டு அடுத்த சிங்கபெருமாள் கோவில் அருகே கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. சுமார் 3 கி.மீ. தூரத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நிற்கும் சூழல் நிலவுகிறது.

தொடர்ந்து மறைமலை நகர், கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கத்திலும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனிடையே புத்தாண்டு கொண்டாட்டங்களை முடித்துக்கொண்டு பொதுமக்கள் வீடுகளுக்கு திரும்பி வருவதால் கிழக்கு கடற்கரை சாலையில் அக்கரை பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல புத்தாண்டை கொண்டாட மெரினா கடற்கரைக்கு பலரும் குவிந்ததால், காமராஜர் சாலையில் வாகனங்கள் ஊர்ந்து சென்று வருகின்றன.

# இந்த ஆண்டில் 12 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த திட்டம்: இஸ்ரோ தலைவர் சோம்நாத் பேட்டி




ஸ்ரீஹரிகோட்டா, ஜன.3

2025ம் ஆண்டு ககன்யான் திட்டம் மூலம் மனிதர்களை விண்ணிற்கு அனுப்ப உள்ளோம் என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறினார்.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து, பி.எஸ்.எல்.வி. சி58 ராக்கெட் இன்று காலை 9.10 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இதில், 'எக்ஸ்போசாட்' என்ற செயற்கைக்கோள் பொருத்தப்பட்டு விண்ணில் ஏவப்பட்டது.

இந்த செயற்கைக்கோள் பூமியில்இருந்து650கிலோ மீட்டர் உயரத்தில் புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அங்கிருந்து விண்வெளியில் உள்ள நிறமாலை, தூசு, கருந்துளை வாயுக்களின் மேகக்கூட்டமான 'நெபுலா' உள்ளிட்டவற்றை ஆராய உள்ளது. பி.எஸ்.எல்.வி. சி58 ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டதை பொதுமக்கள், மாணவமாணவியர் கண்டு களித்தனர்.

அதன்பின்னர் செய்தியாளர்கள்சந்திப்பில்இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறியதாவது:

பி.எஸ்.எல்.வி சி58 ராக்கெட் பூமியிலிருந்து 650 கி.மீ புவி வட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட்டு ஆய்வு பணியை தொடங்கியது. வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ள எக்ஸ்போசாட்டின் இயக்கம் சிறப்பாக உள்ளது. இது மிகவும் தனித்துவம் வாய்ந்த ஒன்று; இதில் பிரபஞ்சம் பற்றிய தகவல்களை தரும் செயற்கைக்கோள் இடம் பெற்றுள்ளது.

ககன்யான்தயார்நிலைக்கான ஆண்டாக 2024 இருக்கப் போகிறது. 2025ம் ஆண்டு ககன்யான் திட்டம் மூலம் மனிதர்களை விண்ணிற்கு அனுப்ப உள்ளோம். இந்த ஆண்டில் (2024) 12 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. ஆதித்யா எல்1 விண்கலம் வரும் 6ம் தேதி எல்1 புள்ளியை எட்டும், அதன்பிறகு இறுதிகட்ட பணிகளை மேற்கொள்வோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பொங்கலுக்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1,000 ரொக்கத்துடன் பரிசு தொகுப்பு? விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு

சென்னை, ஜன.3

பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குவது குறித்து ஓரிரு நாளில் தமிழக அரசு அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடும் என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பண்டிகையின்போது ரொக்கப்பணத்துடன் கரும்பு, பச்சரிசி போன்ற பரிசு தொகுப்பை தமிழக அரசு வழங்கி வருகிறது.



சமீபத்தில் மிக்ஜம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களை சேர்ந்த மக்களுக்கும், வரலாறு காணாத கனமழையால் பாதிக்கப்பட்ட நெல்லை, தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கும் தமிழக அரசு சார்பில் குடும்ப அட்டைக்கு தலா 6,000 ரூபாயும், தென்காசி, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் குடும்ப அட்டைக்கு தலா 1,000 ரூபாயும் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், வருகிற பொங்கல் பண்டிகைக்கு பரிசு பொருட்கள் வழங்குவது தொடர்பாக தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

வருகிற பொங்கல் பண்டிகைக்கு அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1,000 ரொக்கப்பணத்துடன் அரிசி, சர்க்கரை, கரும்பு உள்ளிட்ட பரிசு தொகுப்பை வழங்க அரசு திட்டமிட்டு வருகிறது.

இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் ஓரிரு நாளில் வெளியாகும் என்றும், ஜனவரி 2வது வாரத்தில் பரிசுத்தொகுப்பு வழங்கப்படும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# 19 ஐபிஎஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

சென்னை, ஜன.3

புத்தாண்டு தினமான இன்று (ஜனவரி 1) 19 ஐபிஎஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு அளித்து தமிழக உள்துறை செயலாளர் அமுதா உத்தரவிட்டுள்ளார். அதன்படி, 2004 – 2006 தமிழ்நாடு கேடர் பேட்சை சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரிகளான ஜெயஸ்ரீ, சாமுண்டேஸ்வரி, லக்ஷ்மி, ராஜேஸ்வரி, ராஜேந்திரன், முத்துசாமி, மயில்வாகனன் ஆகியோர் ஐஜிஆக பதவி உயர்வு பெற்றுள்ளனர். 2009 – 2010 பேட்ச்சை சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரிகளான வெண்மதி, அரவிந்தன், விக்ரமன், சரோஜ் குமார் தாக்கூர், மகேஷ் குமார், தேவராணி, உமா, திருநாவுக்கரசு, ஜெயந்தி, ராமர் ஆகியோர் டிஐஜியாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். 1999 கேடர் ஐபிஎஸ் அதிகாரிகளான ஆனந்த் குமார் சோமனி, ராமச்சந்திரன் ஆகி யோர் ஏடிஜிபி ஆக பதவி உயர்வு பெற்று ள்ளனர்.

# தூத்துக்குடியில் சாதி கலவர பதட்டம்?

தூத்துக்குடி,ஜன.3

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிக்க சாதியினர் மூவர் கூட்டாக சேர்ந்து பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கொடூரமான முறையில் வெட்டி கொலை செய்த சம்பவத்தால், அங்கு சாதி கலவரம் ஏற்படும் சூழல் நிலவுவதாக காவல்துறையினர் சொல்கிறார்கள்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் பெருமாள்புரம் கிராமத்தை சேர்ந்த பட்டியலின இளைஞர் முத்துபெருமாள் (27).

இவர் நேற்று (டிசம்பர் 31) காலை பெருமாள்புரத்தில்இருந்துகுன்னங்குளம் நோக்கி தனது டூ வீலரில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, குன்னங்குளம் அருகே மூன்று இளைஞர்கள் முத்துப்பெருமாளை வழி மறித்து, அவரது கைகள், முகம், தலை என உடல் முழுவதும் கொடூரமான முறையில் வெட்டி சிதைத்துள்ளனர். இதனால், சம்பவ இடத்திலேயே முத்து பெருமாள் உயிரிழந்தார்.

உடனடியாக தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பெருமாள்புரம் காவல்துறையினர், முத்து பெருமாள் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த கொலை சம்பவம் குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வந்தனர்.

விசாரணையில், முத்துப்பெருமாளை அரிவாளால் தாக்கி கொலை செய்தது, தெற்கு காரசேரி பகுதியை சேர்ந்த ஆதிக்க சாதியினர் இசக்கிபாண்டி, முத்துகிருஷ்ணன், காட்டான் என்பது தெரியவந்தது.

அவர்களை கைது செய்த காவல்துறையினர், தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக முத்துப்பெருமாள், தெற்கு காரசேரி பகுதியில் டூ வீலரில் வேகமாக சென்றுள்ளார்.

அப்போது இசக்கி பாண்டி மற்றும் அவரது நண்பர்களான முத்துகிருஷ்ணன், காட்டான் ஆகிய மூவரும் முத்துபெருமாளை வழி மறித்து, "ஊருக்குள்ள இப்படி தான் வேகமா போவியா? இனிமே இந்த பக்கம் வந்தா தொலைச்சிக்கட்டிருவோம்" என்று மிரட்டியுள்ளனர்.

இதனால் அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்த பின்னணியில் தான் முத்துப்பெருமாள் கொலை செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இந்த கொலை சம்பவத்தால் தூத்துக்குடி மாவட்டத்தில் பதட்டமான சூழல் நிலவுவதாக சொல்கிறார்கள் காவல்துறையினர். பழிக்குப் பழியாக வேறு ஏதேனும் கொலை சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்காக, தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் காவல்துறையினர் உஷார்படுத்தப் பட்டுள்ளனர்.

# "இந்தாண்டு தங்கம் விலை எகிறும்.. நிச்சயம் இதுதான் நடக்கும்!" ஆனந்த் சீனிவாசன் நறுக்! எவ்வளவு உயரும்

சென்னை, ஜன.3

இந்த ஆண்டில் தங்கம் விலை எப்படி இருக்கும். தங்கம் விலை தொடர்ந்து உயர என்ன காரணம் என்பது குறித்து பிரபல பொருளாதார வல்லுநர் ஆனந்த் சீனிவாசன் விளக்கியுள்ளார்.

கடந்த சில மாதங்களாகத் தங்கம் விலையில் பெரியளவில் ஏற்ற இறக்கம் இல்லாமல் இருந்தது. ஆனால், கடந்த இரு வாரங்களாகத் தங்கம் விலை நல்ல ஏற்றம் கண்டது. இப்போது தங்கம் விலை ரூ.5900ஐ தாண்டி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்தியர்களைப் பொறுத்தவரைத் தங்கம் என்பது வெறும் ஆபரணங்கள் மட்டுமில்லை.. ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் பலரும் தங்கத்தையே மிகச் சிறந்த சேமிப்பு மற்றும் முதலீடுகளின் ஒரு கருவியாகப் பார்க்கிறார்கள்.

ஆனந்த் சீனிவாசன்: இதன் காரணமாகவே திருமணம் உள்ளிட்ட அனைத்து நல்ல காரியங்களிலும் தங்கம் பிரதான இடத்தை பெறுகிறது. இந்தச் சூழலில் தங்கம் விலை திடீரென அதிகரிக்கத் தொடங்கியுள்ளது பலருக்கும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. இதற்கிடையே தங்கம் விலை ஏன் அதிகரிக்கிறது... வரும் காலத்தில் தங்கம் விலை எப்படி இருக்கும் என்பவை குறித்து பிரபல பொருளாதார வல்லுநர் ஆனந்த் சீனிவாசன் விளக்கியுள்ளார்.

இது குறித்து அவர் தனது வீடியோவில்கூறுகையில், "தங்கம் விலை ரூ. 5900ஐ தாண்டிவிட்டது. இத்துடன்நாம் ஜிஎஸ்டி தொகையைச் சேர்த்தாலே ரூ. 6100ஐ தாண்டிவிடும். இதுபோக நகையாக எடுத்தால் செய்கூலியும் தர வேண்டி இருக்கும். தங்கம் விலை இனி இப்படி தான் இருக்கும். இதற்குப் பிறகு தங்கம் விலை குறையும் என்று நினைக்க வேண்டும். இதற்குப் பிறகு தங்கம் விலை அதிகரிக்கவே செய்யவும்.

பார்வை 1: சர்வதேச பொருளாதாரத்தைப் பொறுத்தவரைஇப்போது இரண்டு பார்வை இருக்கிறது. முதலில் அமெரிக்காவில் recession எனப்படும் பொருளாதார மந்தநிலை ஏற்படாது. மந்தநிலை ஏற்படுவதற்குள் அமெரிக்க மத்திய வங்கியே வட்டி விகிதத்தைக் குறைக்கத் தொடங்கும். குறைந்தது 3 முறை அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதத்தைக் குறைக்கும் என்கிறார்கள். இன்னும் சில 8 முறை கூட குறைப்பார்கள் என்கிறார்கள்.

ஆனந்த் சீனிவாசன் சொல்வது இருக்கட்டும்.. ஆனந்த் சீனிவாசன் சொல்வது இருக்கட்டும்.. "தங்கம்" எப்படி உருவானது தெரியுமா? படிக்கவே பயங்கரமா இருக்கே

இதன் காரணமாகவே அமெரிக்க டிரஸரி விகிதம் கூட கடுமையாகக் குறைந்துள்ளது. எனவே, அமெரிக்கா பொருளாதாரம் எந்தவொரு மேஜர் பிரச்சினையும் இல்லாமல் இருக்கும். உலக சந்தையில் பலரும் இதே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

பார்வை 2: அடுத்த மற்றொரு பார்வை என்னவென்றால், அமெரிக்க மத்திய வங்கி தனது வட்டி விகிதத்தை உடனடியாக குறைக்கத் தொடங்கினால் அப்போது பணவீக்க பிரச்சினை மீண்டும் வரும். எனவே, குறைந்தது சில மாதங்களாவது வட்டி விகிதத்தை இப்படியே வைத்திருக்க வேண்டும். வட்டி விகிதத்தைக் குறைத்தாலும் அது 2024 பிற்பகுதியில் தான் வரும். எனவே, அமெரிக்காவில் மந்தநிலை வரும் என்பது இவர்கள் பார்வை.

என்ன நடந்தாலும் தங்கம்தான்: இந்த இரு தரப்பு சொல்வதில் எது நடக்கும் என்பதை 2024ஐ நிர்ணயம் செய்யும். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்.. தங்கம் விலை நிச்சயம் மேலே செல்லும். மந்த நிலை வந்தாலும் தங்கம் விலை அதிகரிக்கும்.. வட்டி விகிதத்தைக் குறைத்தாலும் தங்கம் விலை உயரும்,

எனவே, எது நடந்தாலும் நமக்கு பாசிட்டிவ் முடிவுகளைத் தருவதாகத் தங்கம் மற்றும் தங்கம் சார்ந்த நிறுவனங்கள் இருக்கும்" என்று அவர் கூறியுள்ளார்.

# சுற்றுலா வேன் மீது மோதிய லாரி: ஒரு வயது குழந்தை உட்பட 3 பேர் உயிரிழப்பு!

தூத்துக்குடி, ஜன.3

தூத்துக்குடி மாவட்டம் முறப்பநாடு அருகே சுற்றுலா வேன் மீது லாரி மோதியதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்திர பிரதேச மாநிலத்தை சேர்ந்த 20க்கும் மேற்பட்டவர்கள் தமிழகத்திற்கு ஆன்மிக சுற்றுலா வந்துள்ளனர். அவர்கள் ராமேஸ்வரத்தில் சாமி தரிசனம் செய்துவிட்டு 2 வேன்களில் கன்னியாகுமரி நோக்கி சென்று கொண்டிருந்தனர்.



அப்போது நெல்லை – தூத்துக்குடி நெடுஞ்சாலையில் முறப்பநாடு அருகே இன்று (டிசம்பர் 31) அதிகாலை 4 மணியளவில் சென்று கொண்டிருந்த போது எதிர் திசையில் வந்த லாரி சுற்றுலா வேன் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே ஆன்மிக சுற்றுலா வந்த சுமன், பார்வதி ஆகிய 2 பெண்கள் உயிரிழந்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த 16 பயணிகள் நெல்லை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் சிகிச்சை பலனின்றி ஒரு வயது பெண் குழந்தை உயிரிழந்தது. இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டிற்கு ஆன்மிக சுற்றுலா வந்தவர்கள் விபத்துக்குள்ளானது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தூத்துக்குடி: 14 நாட்களுக்குப் பின்னர் மின் உற்பத்தி

தூத்துக்குடி, ஜன.3

தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் வெள்ள நீர் புகுந்ததால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையில் 14 நாட்களுக்குப் பின் தற்போது ஐந்தாவது அலகில் மின்உற்பத்தி தொடங்கியுள்ளது.



தமிழக அரசுக்கு சொந்தமான அனல்மின் நிலையம் தூத்துக்குடி தெர்மல் நகர் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்த அனல்மின் நிலையத்தில் தலா 210 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட ஐந்து யூனிட்களில் இருந்து சுமார் 1,050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த 17 மற்றும் 18ஆம் தேதி ஆகிய இரண்டு நாள்களில் பெய்த கனமழை காரணமாக, மின் நிலைய வளாகத்தில் வெள்ள நீர் சூழ்ந்தது.

இதைத் தொடர்ந்து மின் நிலையத்தில் உள்ள ஐந்து யூனிட்களிலும் மின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து மழை நீரை அகற்றும் பணி நடைபெற்று வந்தது. அதுபோல் மின் உற்பத்தியை தொடங்குவதற்காக அனைத்து பணிகளும் நடைபெற்று வந்தன.

18ஆம் தேதியில் இருந்து ஐந்து மின் உற்பத்தி யூனிட்டுகளும் இயங்காமல் இருந்து வந்த நிலையில் தற்போது 14 நாட்களுக்கு பின்னர் ஐந்தாவது யூனிட் மட்டும் சரி செய்யப்பட்டு மின் உற்பத்தி தொடங்கியது. இதில் 210 மெகாவாட் மின் உற்பத்தி நடந்து வருகிறது. மற்ற நான்கு யூனிட்களையும் சரி செய்யும் பணி நடைபெற்று வருவதாக அனல்மின் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வேலை வாய்ப்பு: சென்னை ஐஐடியில் பணி

சென்னை, ஜன.3

சென்னை ஐஐடியில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்குத் தகுதியும் விருப்பமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகின்றன.

பணியிடங்கள்: 9

பணியின் தன்மை: technician ஊதியம்: ரூ.20,000 – 50,000/ கல்வித் தகுதி: BE/ B.Tech, M.Sc கடைசித் தேதி: 11/1/2024

மேலும் விவரங்களுக்கு இந்த லிங்க்கை கிளிக் செய்து தெரிந்து கொள்வோம்.

# தூங்கி கொண்டிருந்த 4 பேர் பரிதாப பலி

திருச்சி, ஜன.3

திருச்சியில் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருச்சி அரியமங்கலம் அம்பிகாபுரம் காந்திநகர் குறுக்கு தெருவைச் சேர்ந்தவர் ஆட்டோ டிரைவர்மாரிமுத்து. இவர் தனது தாய் சாந்தி (60), மனைவி விஜயலட்சுமி (45), மகள்கள் பிரதீபா (12), ஹரிணி (10) ஆகியோருடன் வசித்து வருகிறார். மாரிமுத்து உறவினர் வீட்டு துக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு சென்றுள்ளார்.



மாரிமுத்துவின் தாய், மனைவி, மகள்கள் நேற்று இரவு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தனர். இந்நிலையில் நள்ளிரவில் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்தது. இதில் வீட்டில் உறங்கி கொண்டிருந்த 4 பேரும் ஈடுபாடுகளில் சிக்கினர்.

விடியற்காலையில் இதனை கண்ட அக்கம் பக்கத்தினர் அரியமங்கலம் போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் காவல்துறையினர் ஈடுபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் மாரிமுத்துவின் தாய், மனைவி, மகள்கள் என பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இது குறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

புத்தாண்டு தினமான இன்று ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உயிரிழந்தது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# புத்தாண்டில் குறைந்த சிலிண்டர் விலை : எவ்வளவு தெரியுமா?

சென்னை, ஜன.3

ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும் வணிக மற்றும்வீட்டுபயன்பாட்டு சிலிண்டர் விலை மாற்றப்பட்டு வருகிறது. இந்த நிலையில் 19 கிலோ கிராம் எடை கொண்ட வணிக சிலிண்டர் விலையில் ரூ.4.50 குறைத்துள்ளது மத்திய அரசு.

இதனால் ரூ.1,929க்கு விற்கப்பட்டு வந்த வணிக சிலிண்டர் இன்று முதல் ரூபாய் 1,924.50 க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த மாதம் 22ஆம் தேதி வணிக சிலிண்டரின் விலை ரூ. 39.50 குறைப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தற்போது புத்தாண்டில் மேலும் ரூபாய் 4.50 குறைக்கப்பட்டுள்ளது வியாபாரிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில் வீட்டு பயன்பாட்டு எல்பிஜி சிலிண்டர்களின் விலையில் மாற்றமின்றி ரூ.918.50க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இன்னும் 4 மாதங்களில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், சமீப காலமாக தொடர்ந்து குறைக்கப்பட்டு வரும் சிலிண்டர் விலை பொதுமக்களிடையே கவனம் பெற்று வருகிறது.

# ஜிம் உரிமையாளர்கள் கலந்தாய்வு கூட்டம்

திருப்பூர், ஜன.3

திருப்பூர் மாவட்டம் ஜிம் உரிமையாளர்கள் சங்கத்தின் கலந்தாய்வு மிகச் சிறப்பாக நடந்தன.

இதில் அருள் காந்தி தலைவர் அயன் பிட்னஸ் ஜிம் மற்றும் பிரபு அயன் ஜிம் செயலாளர் மற்றும் ஜெயமுருகன் கவின் ஜிம் பொருளாலர் மற்றும் அனைத்து திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 76 ஜிம் இதில் 68 ஜிம் உரிமையாளர்களும் கலந்து கொண்டனர். இதில் ஜிம்மின் ஒழுக்கங்களை பற்றியும் ஜிம் எப்படி செயபல்பட வேண்டும் என்பது




பற்றியும் ஊக்க மருந்து உபயோக்கிப்பதனால் வரும் நன்மைகளை பற்றியும் தொடர்ந்து தீமைகளை அதனை வரும் பற்றியும் கலந்தாய்வு கூட்டத்தில் மிகச்சிறப்பாக பேசப்பட்டது.



## புத்தாண்டுக்கு புது சர்ப்ரைஸ் கொடுத்த லால் சலாம் படக்குழு

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'லால் சலாம்'. கிரிக்கெட்டை மையமாகவைத்து உருவாகி இருக்கும் இந்தபடத்தில் விக்ராந்த், விஷ்ணு விஷால் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

மேலும், நடிகர் ரஜினிகாந்த், முன்னாள் கிரிக்கெட் வீரர்கபில்தேவ் ஆகியோர்இதில்சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளனர். இதில் ரஜினி மொய்தீன் பாய் என்ற கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்தை லைகா நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த நிலையில், புத்தாண்டு மற்றும் இயக்குனர் ஐஸ்வர்யா ரஜினிகாந்த்இன் பிறந்தநாளை ஒட்டி லால் சலாம் படத்தின் மேக்கிங் வீடியோவை படக்குழு வெளியிட்டு உள்ளது. இதில் படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட காட்சிகள் இடம்பெற்றுள்ளன. லால் சலாம் படம் இந்த ஆண்டு பொங்கல் தினத்தில் வெளியாக இருக்கிறது.

## 'கேப்டன் மில்லர்' படத்தின் 3வது பாடல் குறித்த அறிவிப்பு வெளியானது

இயக்குனர் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள திரைப்படம் 'கேப்டன் மில்லர்'. வரலாற்று பாணியில் உருவாகியுள்ள இந்த படத்துக்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இதில் பிரியங்கா அருள் மோகன், நிவேதிதா சதிஷ், ஜான் கொக்கன், சுமேஷ் மூர், சிவராஜ்குமார் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.



'கேப்டன் மில்லர்' திரைப்படத்தின் டீசர் மற்றும் இரண்டு பாடல்கள் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்த நிலையில் இந்த படத்தின் மூன்றாவது பாடல் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி இந்த படத்தின் மூன்றாவது பாடல் நாளை மாலை 6 மணிக்கு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 'கேப்டன் மில்லர்' திரைப்படம் வருகிற 12 ந்தேதி வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கல்யான அப்டேட் கொடுத்த பிரேம்ஜி



நடிகர் சிலம்பரசன் இயக்கி, நடித்து பெரும் வெற்றி பெற்ற வல்லவன் படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் பிரேம்ஜி. இதைத் தொடர்ந்து இவர் சென்னை 28 படத்தில் நடித்திருந்தார். இந்த படத்திற்கு பிறகு இவர் ஏராளமான படங்களில் தொடர்ச்சியாக நடித்தார்.

அந்த வகையில், இவர் மற்ற இயக்குனர்கள் படங்களில் நடித்ததை விட தனது சகோதரர் வெங்கட் பிரபு இயக்கிய சரோஜா, கோவா, மங்காத்தா, பிரியாணி, மாசு என்கிற மாசிலாமணி உள்ளிட்டவை பிரேம்ஜிக்கு நல்ல வரவேற்பை பெற்றுக் கொடுத்தது.

தமிழ் திரையுலகில் சிங்கிளாக வலம்வரும் பிரேம்ஜி தனது திருமணம் பற்றி வெளிப்படையாக அறிவித்து இருக்கிறார். புத்தாண்டு நாளில் இதுதொடர்பாக அவர் வெளியிட்ட பதிவில், "புத்தாண்டு வாழ்த்துக்கள், இந்த ஆண்டு நான் திருமணம் செய்து கொள்கிறேன். டாட்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## மீண்டும் இணையும் மாமன்னன் கூட்டணி வெளியானது அதிகாரப்பூர்வ அப்டேட்



தமிழ் திரையுலகில் முன்னணி தயாரிப்பு நிறுவனமான சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தனது 98வது படம் குறித்த அறிவிப்பை வெளியிட்டு உள்ளது. அறிமுக இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி இயக்கும் இந்த படத்தில் வடிவேலு மற்றும் பகத் பாசில் இணைந்து நடிக்கின்றனர்.

யுவன் சங்கர் ராஜா இசையமைக்கும் இந்த படம் முழுக்க முழுக்க காமெடி காட்சிகளை கொண்டிருக்கும் என கூறப்படுகிறது. மாமன்னன் படத்தை தொடர்ந்து வடிவேலு மற்றும் பகத் பாசில் இணையும் புதிய படம் குறித்த அறிவிப்பு புத்தாண்டு தினத்தில் வெளியிடப்பட்டு இருக்கிறது.

விரைவில் இந்த படத்தின் படப்பிடிப்பு துவங்க இருக்கும் நிலையில், இதன் தலைப்பு, ரிலீஸ் மற்றும் இதர அப்டேட்கள் அடுத்தடுத்து வெளியாகும் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

## புத்தாண்டில் நடிகர் சந்தானம் செய்த செயல்... பாராட்டும் ரசிகர்கள்...!



சின்னத்திரையில் அறிமுகமாகி தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகர் சந்தானம். பல முன்னணி நடிகர்களின் படங்களில் நடித்து முன்னணி காமெடியனாக உயர்ந்தார். இவர் கடந்த 2016ம் ஆண்டு வெளியான 'இது நம்ம ஆளு' படத்திற்கு பிறகு காமெடியனாக நடிப்பதை தவிர்த்தார். இனி கதையின் நாயகனாக மட்டுமே நடிக்கப்போவதாக தெரிவித்தார். இவர் கதையின் நாயகனாக நடித்து வெளியான தில்லுக்கு துட்டு, பாரிஸ் ஜெயராஜ், டிக்கிலோனா, சபாபதி, குலுகுலு, டிடி ரிட்டர்ன்ஸ் போன்ற படங்கள் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்று சந்தானத்தை முன்னணி நாயகனாக உயர்த்தியது. இவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான 80ஸ் பில்டப் திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில் உலகம் முழுவதும் நேற்று நள்ளிரவு 2024ம் ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டம் களைகட்டியது. மக்கள் இனிப்பு மற்றும் கேக்குகளை வழங்கியும் பட்டாசுகளை வெடித்தும் புத்தாண்டை வரவேற்றனர். புத்தாண்டு தினத்தில் நடிகர் சந்தானம் செய்த செயலை ரசிகர்கள் பலரும் பாராட்டி வருகின்றனர். விவசாயம் மீது அதிக ஆர்வம் கொண்ட நடிகர் சந்தானம் புத்தாண்டு தினத்தில் மரம் நடும் வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அவர் அந்த பதிவில், 'இனிய புத்தாண்டு வாழ்த்துகள், தொடர்ந்து மரம் நடுங்கள், ஒன்றாக உலகை குணப்படுத்துவோம்' என்ற பதிவிட்டுள்ளார். அந்த பதிவு தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## குடும்பத்தினருடன் புத்தாண்டு கொண்டாடிய கமல்ஹாசன்... வைரலாகும் புகைப்படங்கள்...!



உலகம் முழுவதும் இன்று 2024ம் ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டம் களைகட்டியுள்ளது. நள்ளிரவு முதலே மக்கள் இனிப்பு மற்றும் கேக்குகளை வழங்கியும் பட்டாசுகளை வெடித்தும் புத்தாண்டை கொண்டாடி வருகின்றனர்.

அந்தவகையில் நடிகர் கமல்ஹாசன் தனது குடும்பத்தினருடன் புத்தாண்டு கொண்டாடிய புகைப்படங்களை நடிகை சுருதிஹாசன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் நடிகர் கமல்ஹாசன் தனது மகள் சுருதிஹாசன், இயக்குனர் மணிரத்னம், நடிகை சுஹாசினியுடன் புத்தாண்டை கொண்டாடும் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களுடன் நடிகை சுருதிஹாசனின் காதலன் சாந்தனுவும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார். அந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

நடிகர் கமல்ஹாசன் இயக்குனர் சங்கர் இயக்கத்தில் இந்தியன்2 படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்திற்கு பிறகு கமல்ஹாசனின் 234வது படத்தை இயக்குனர் மணிரத்னம் இயக்குகிறார். 37 வருடங்களுக்கு பிறகு இருவரும் இணையவுள்ளதால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

மெட்ராஸ் டாக்கீஸ், ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க ரவி கே. சந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார். நடிகை திரிஷா, நடிகர்கள் துல்கர் சல்மான், ஜெயம் ரவி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கும் இந்த படத்திற்கு ''தக் லைப்' என பெயரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் கில் சிறப்பாக செயல்படவில்லை என்றால் அவரது இடம் கேள்விக்குறியாகிவிடும்: தினேஷ் கார்த்திக்



இந்தியா தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலானமுதலாவதுடெஸ்ட்போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 32 ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இந்த தோல்வியின் மூலம் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் பெரும் சரிவை சந்தித்தது.

இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரரான சுப்மன் கில் டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகவும் தடுமாற்றமானசெயல்பாட்டைவெளிப்படுத்தி வருகிறார்.அதிலும்குறிப்பாகவெளிநாடுகளில் நடைபெறும் ஆட்டத்தில் அவரது பேட்டிங் மிகவும் மோசமாக உள்ளது.

தென்னாப்பிரிக்க அணிக்கு எதிராக நடைபெற்று முடிந்த முதலாவது போட்டியில் முதல் இன்னிங்சில் 2 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 26 ரன்கள் மட்டுமே குவித்து ஏமாற்றம் அளித்தார்.

இந்நிலையில் சுப்மன் கில் தொடர்ச்சியாக இதே போன்ற செயல்பாட்டை வெளிப்படுத்தினால் அவரது டெஸ்ட் இடமானது வேறு வீரருக்கு சென்று விடும் என தினேஷ் கார்த்திக் எச்சரித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது,

டெஸ்ட் கிரிக்கெட்டில் கில் சிறப்பாக செயல்படவில்லை என்றால் அவரது இடம் கேள்விக்குறியாகிவிடும். நிச்சயம் எதிர்பார்ப்புகள் அளவிற்கு அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பான செயல்பாடுகளை இதுவரை வெளிப்படுத்தவில்லை. கிட்டத்தட்ட 20 போட்டிகள் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடியும் 30 ரன்களுக்குள் தான் சராசரி வைத்திருக்கிறார்.

எனவே இவ்வாறு விளையாடினால் அவரது இடத்தை விரைவில் இழக்க நேரிடும். மேலும் அவரது இடத்திற்காக உள்ளூர் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட்டு வரும் சர்பராஸ் கான் மற்றும் ரஜத் பட்டிதார் ஆகிய இருவருமே காத்துக் கொண்டிருக்கின்றனர். நிச்சயம் விரைவில் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## மகளிர் கிரிக்கெட்; ஆஸ்திரேலியாவின் வெற்றிப் பயணத்தை சீக்கிரம் முறியடிக்க முயற்சிப்போம் தீப்தி சர்மா




ஆஸ்திரேலியமகளிர்கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றியது. இதையடுத்துஇருஅணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இரண்டு போட்டிகளின் முடிவில் 20 என ஆஸ்திரேலிய அணி தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று மும்பையில் நடைபெற உள்ளது. இன்றைய ஆட்டத்திலும் வெற்றி பெற்று தொடரை முழுமையாக கைப்பற்றும் முனைப்புடன் ஆஸ்திரேலியாவும், ஆறுதல் வெற்றிக்காக இந்தியாவும் போராடும் என்பதால் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

இந்நிலையில் இன்று நடைபெற உள்ள ஆட்டம் குறித்து இந்திய ஆல்ரவுண்டர் தீப்தி சர்மா கூறியதாவது, வெற்றி, தோல்வி என்பது விளையாட்டில் ஒரு அங்கம். ஆனால் பேட்டிங்கோ அல்லது பந்து வீச்சோ ஒரு அணியாக முன்னேற்றம் கண்டுள்ளோம். அவர்களின் வெற்றிப் பயணத்தை முடிந்தவரை சீக்கிரம் முறியடிக்க முயற்சிப்போம்.

நமது அணியில் நிறைய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடிய போதெல்லாம் வெற்றிக்கு அருகில் கூட வரமாட்டோம். ஆனால் இப்போது வெற்றியை நெருங்குவது நல்ல அறிகுறியாகும். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாடு வாலிபால் லீக் போட்டி இன்று தொடக்கம்; முதல் ஆட்டத்தில் சென்னை கடலூர் அணிகள் மோதல்



தமிழ்நாடு கைப்பந்து சங்கம் சார்பில் முதல் முறையாக புரோ லீக் பாணியில் தமிழ்நாடுவாலிபால்லீக்போட்டி(டி.என்.வி.எல்.)நடத்தப்படுகிறது.தமிழ்நாட்டில் கைப்பந்து போட்டியை மேலும் பிரபலப்படுத்தவும், இளம் வீரர்களின் திறமையை வளர்க்கவும் மற்றும் தேசிய அணியில் இடம் பெறும் தமிழக வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடன் உதயமாகும் இந்த போட்டி சென்னை மயிலாப்பூரில் உள்ள சாந்தோம் மேல்நிலைப்பள்ளியின் உள்விளையாட்டு அரங்கில் நாளை (புதன்கிழமை) தொடங்கி 12ந்தேதி வரை நடக்கிறது.

இதில் சென்னை ராக்ஸ்டார்ஸ், விழுப்புரம் சூப்பர் கிங்ஸ், கிருஷ்ணகிரி புல்ஸ், விருதுநகர் கிங் மேக்கர்ஸ், குமரி போனிக்ஸ், கடலூர் வித் அஸ் ஆகிய 6 அணிகள் கலந்து கொள்கின்றன.ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதலிடம் பிடிக்கும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும். 2வது மற்றும் 3வது இடம் பிடிக்கும் அணிகள் பிளேஆப் சுற்றில் மோதி அதில் வெற்றி பெறும் அணி 2வது அணியாக இறுதிப்போட்டியை எட்டும்.

போட்டியில் சாம்பியன் பட்டத்தை வெல்லும் அணிக்கு ரூ.5 லட்சமும், 2வது இடத்தை பிடிக்கும் அணிக்கு ரூ.3 லட்சமும், 3வது இடம் பெறும் அணிக்கு ரூ.2 லட்சமும் பரிசுத்தொகையாக வழங்கப்படும். முதல் நாளான நாளை இரண்டு லீக் ஆட்டங்கள் நடக்கின்றன. முதல் ஆட்டத்தில் சென்னை ராக்ஸ்டார்ஸ் கடலூர் வித் அஸ் (மாலை 5.30 மணி) அணிகள் மோதுகின்றன. 2வது ஆட்டத்தில் கிருஷ்ணகிரி புல்ஸ் விழுப்புரம் சூப்பர் கிங்ஸ் (இரவு 8 மணி) சந்திக்கின்றன.



அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

விளக்கம்:

எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால், அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.